இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"நம்முடைய குடும்பங்கள், நண்பர்கள், பணிபுரியும் இடங்கள், சமூக ஊடகங்கள், அரசியல் விவாதங்கள் மற்றும் கிறிஸ்தவக் கூட்டுறவுகளில் நாம் அன்பைப் போற்றி வளர்க்கக் கற்றுக்கொள்வோமாக! அதன் மூலம் வெறுப்புணர்வு மறைந்து, நம்பிக்கையும் அமைதியும் மலரட்டும்."

# உலகளாவிய திருஅவையோடு ஒன்றிணைந்து பயணிப்போம்



(மலேசியா, சிங்கப்பூர், புருனை ஆயர்கள் ரோம் வத்திக்கானுக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர். இதுக்குறித்து சிபு ஆயர் ஜோசப் ஹி அவர்களின் அனுபவத்தை நம்மோடு பகிர்ந்துக் கொண்டார்)

எனக்கு இந்தப் பயணம் என்பது வெறும் கூட்டங்களின் தொடர்ச்சியாகவோ அல்லது அலுவல்முறை சந்திப்புகளாகவோ மட்டும் அமையவில்லை. மாறாக, திருத்தூதர்களின் வழித்தோன்றல்களாகிய ஒவ்வொரு ஆயருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள தெய்வீக அழைப்பை (Vocation) ஆழமாக நினைவூட்டும் ஒரு ஆன்மீக நிகழ்வாக இது இருந்தது.

உரோமை நகரில் நான் பெற்ற அனுபவம், ஒரு ஆயர் தனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள உள்ளூர் திருஅவையை (மறைமாவட்டத்தை) வழிநடத்துவதில் அவருக்கு இருக்கும் முக்கியப் பங்கு, கடமை மற்றும் பொறுப்பை எனக்கு மீண்டும் நினைவூட்டியது. கிறிஸ்து ஒப்படைத்த திருத்தூதுவப் பணியைத் தொடர்ந்து ஆற்றி, இறைமக்களை விசுவாசம், நம்பிக்கை மற்றும் பிறன்பு வழியில் வழிநடத்த ஒரு ஆயர் அழைக்கப்படுகிறார்.

புனிதர்களான பேதுரு, பவுல் ஆகியோரின் கல்லறைகளில் நான் செபித்தபோதும், கத்தோலிக்கத் திருஅவையின் மையப்பகுதியைச் சுற்றிப் பார்த்தபோதும், நம்முடைய சிபு மறைமாவட்டத்தை என் இதயத்தோடு இணைத்துக்கொண்டே சென்றேன். நமது கத்தோலிக்க விசுவாசத்தின் மையமாகிய உரோமையில் இருந்தபொழுது, நம்முடைய விசுவாசிகள், குருக்கள், துறவிகள் மற்றும் குடும்பங்கள் அனைவருக்காகவும் ஒரு 'நம்பிக்கையின் திருப்பயணியாக' (Pilgrim of Hope) நான் தொடர்ந்து செபித்தேன். நம் உள்ளூர் திருஅவையின் மகிழ்ச்சி, நம்பிக்கை, சவால்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் ஆண்டவரின் பாதத்தில் சமர்ப்பித்தேன்.

## சேவை செய்யவே வந்தோம்

என்னுடன் பிற ஆயர்களும் இணைந்து, திருப்பீடத்தின் (Vatican) பல்வேறு துறைகளை (Dicasteries) நேரில் சென்று பார்வையிட்டோம். அந்த வத்திக்கான் அலுவலகங்களில் செயல்பட்ட ஆன்மீக உணர்வு என்னை ஆழமாகத் தொட்டது. ஒவ்வொரு துறையும் ஒரு தெளிவான, அழகான செய்தியை நமக்கு உணர்த்தியது: "அவர்கள் சேவை செய்யப் படுபவர்கள் அல்ல, மாறாகச் சேவை செய்யவே இருக்கிறார்கள்." உலகெங்கும் உள்ள உள்ளூர் திருஅவைகள் கிறிஸ்துவின் பணியைத் தொடர அவர்களுக்குத் துணையாக இருப்பதும், அவர்களை ஆதரிப்பதுமே வத்திக்கான் அலுவலகங்களின் முக்கிய நோக்கமாகும்.

இந்தப் பயணம், விசுவாசச் சமூகத்திற்குள் ஒற்றுமையை வளர்ப்பதற்கும், உறவுகளை வலுப்படுத்துவதற்கும் ஒரு 'அன்பியக் கூட்டுறவு விருந்தின்' (Fellowship Meal) பார்வையை மீண்டும் உறுதிப்படுத்தியது. ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்த ஆன்மீகத் திருவிழா, மகிழ்ச்சியோடும் செப உணர்வோடும் நிறைவடைந்தது. இது பங்கேற்பாளர்களை ஆன்மீக ராதியில் புதுப்பித்ததுடன், தூய கன்னி மரியாளின் நற்பண்புகளைப் பின்பற்ற அவர்களுக்குப் பேரார்வத்தையும் தந்தது. அன்னை மரியாளின் மீது இப்பங்கு மக்கள் கொண்டுள்ள ஆழமான அன்பைப் பிரதிபலிக்கும் வகையில், விசுவாசம், பக்தி மற்றும் சமூக ஒருமைப்பாட்டின் தகுந்த கொண்டாட்டமாக இது அமைந்தது.

ஆயர் ஜோசப் ஹி, சிபு மறைமாவட்டம்

# வெறுப்புணர்வை ஒழித்து அமைதியை வளர்க்க அன்பை ஊட்டுங்கள்



ஸ்பெயினில் உள்ள மொன்செராட் தூய அன்னை மரியாளின் துறவற ஆலயத்தில் (Abbey), திருத்தந்தை 14-ஆம் லியோ செபமாலை செபித்து இறைவேண்டல் செய்தார். மேலும், இரக்கம், ஒப்புரவு (மன்னிப்பு), உண்மை மற்றும் கனிவைக் காட்டுகின்ற கிறிஸ்துவை எப்போதும் நோக்கி இருக்குமாறும் அன்னை மரியாளின் அழைப்பை ஏற்குமாறும விசுவாசிகளுக்கு அவர் அழைப்பு விடுத்தார். அத்தோடு, "நம்முடைய வார்த்தைகளிலும் நடத்தைகளிலும் ஒளிந்திருக்கும் வன்முறையை கிறிஸ்து வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்" என்றும் திருத்தந்தை கூறினார்.

ஜூன் 10, புதன்கிழமை அன்று, பார்சிலோனாவிலிருந்து சுமார் ஒரு மணி நேரப் பயணத் தொலைவில் உள்ள மொன்செராட் மலைத்தொடரில் அமைந்துள்ள தூய அன்னை மரியாளின் பேராலயத்தில் திருத்தந்தை 14-ஆம் லியோ உரை ஆற்றினார். அப்போது, அன்னை மரியா எப்போதும் நம்மை கிறிஸ்துவை நோக்கியே வழிநடத்துகிறார் என்பதையும், கிறிஸ்துவின் அன்பால் மட்டுமே நம் இதயங்களில் குடிகொண்டிருக்கும் வன்முறையை அழிக்க முடியும் என்பதையும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

"தீங்கு விளைவிக்கும் வார்த்தைகள், அவசரமான தீர்ப்புகள், பிறரைப்பற்றிப் புறங்கூறுதல் மற்றும் அவதூறு பேசுதல் ஆகியவற்றை நாம் கைவிடுவதற்கு நமக்குக் கற்றுக் கொடுக்குமாறு, அமைதியின் அரசியான அன்னை மரியாளிடம் மன்றாடுவோம்," என்று செபமாலை செபித்து முடித்த பின் ஸ்பானிய மற்றும் கற்றலான் (Catalan) மொழிகளில் ஆற்றிய உரையில் திருத்தந்தை கூறினார்.

"நம்முடைய குடும்பங்கள், நண்பர்கள், பணிபுரியும் இடங்கள், சமூக ஊடகங்கள், அரசியல் விவாதங்கள் மற்றும் கிறிஸ்தவக் கூட்டுறவுகளில் நாம் அன்பைப் போற்றி வளர்க்கக் கற்றுக்கொள்வோமாக! அதன் மூலம் வெறுப்புணர்வு மறைந்து, நம்பிக்கையும் அமைதியும் மலரட்டும்."

## நம் இதயங்களைக் கடினமாக்கும் கவசங்களை அன்னையின் பாதத்தில் சமர்ப்பிப்போம்

நம்முடைய உலகிலும், உறவுகளிலும் ஏற்படக்கூடிய மோதல்களுக்கு மத்தியில், "இயேசு நமக்கு இரக்கம், ஒப்புரவு, உண்மை மற்றும் கனிவின் பாதையைக் காட்டுகிறார்." இயேசு, "நம்முடைய வார்த்தைகளிலும் நடத்தைகளிலும் ஒளிந்திருக்கக்கூடிய வன்முறையை வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்: பிறரைத் தாழ்த்தும் விமர்சனங்கள், அழிவை உண்டாக்கும் கண்டனங்கள் மற்றும் பிரிவினையை ஏற்படுத்தும் ஆக்கிரமிப்புகள் ஆகியவையே அவை. அந்த மறைமுக வன்முறை பெரும்பாலும் ஒரு வகையான பாதுகாப்புக் கவசம் போலத் தன்னை மறைத்துக் கொள்கிறது. நமக்கு ஏற்பட்ட காயங்கள், பயங்கள் மற்றும் அநீதியால் ஏற்பட்ட துன்பங்களிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளவே இந்தக் கவசத்தை நாம் பயன்படுத்துகிறோம்."

"மரியா தன் கைகளில் ஏந்தியிருக்கும் குழந்தை இயேசு எந்தக் கவசமும் அணிந்திருக்கவில்லை. அவரே பின்னர், சிலுவையில் ஆடைகளின்றித் தம்மை முழுமையாகத் தந்தையாம் இறைவனிடம் ஒப்படைத்து, ஆயுதங்களற்ற தியாக அன்பின் வல்லமையால் நம்மை மீட்டார். யாரும் தனித்துவிடப்படாமல், எல்லாப் பிரிவினைகளையும் விட நம்மிடையேயான ஆன்மீக ஒன்றிப்பு வலுவாக இருக்க வேண்டும் என்பதற்காக, நாம் ஒருவரையொருவர் சகோதர சகோதரிகளாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்னை நமக்கு அழைப்பு விடுக்கிறார்," என்று கூறிய திருத்தந்தை, மொன்செராட் துறவற மடத்தின் துறவிகளுக்கும், அங்குக் குழுமியிருந்த விசுவாசிகள் அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# கிறிஸ்தவர்கள் உலகிற்கு 'சுயநலமற்ற தியாகம் என்னும் புளிப்புமாவை' வழங்க வேண்டும்

ஸ்பெயினிற்கான தமது திருத்தூதுப் பயணத்தின் போது திருத்தந்தை 14-ஆம் லியோ, உலகிற்கு "சுயநலமற்ற தியாகம் என்னும் புளிப்புமாவை" கொண்டு சேர்க்குமாறு கிறிஸ்தவர்களை ஊக்குவித்தார்.

திருத்தந்தை ஸ்பெயினிற்கான தமது திருத்தூதுப் பயணத்தின் முதற்கட்டத்தை நிறைவு செய்தார். இந்த நிறைவு நிகழ்வாக, தமது வருகையை மற்றவர்கள் மகிழ்ச்சியோடு அனுபவிக்க தங்களின் நேரத்தை அர்ப்பணித்து உதவிய தன்னார்வலர்களை அவர் நேரில் சந்தித்துப் பேசினார்.

## சமுதாயத்தின் புளிப்புமாவு

இயேசுவின் புளிப்புமாவு உவமையை நினைவுகூர்ந்த அவர், தன்னார்வலர்களின் தாராள குணம், கிறிஸ்தவர்கள் மற்றவர்கள் மீது காட்டும் அக்கறையின் மூலம் சமுதாயம் என்னும் மாவை எவ்வாறு புளிக்க வைக்க வேண்டும் (உயர்த்த வேண்டும்) என்பதை உணர்த்துகிறது என்றார்.

"சுயநலமின்மை என்பது ஒரு சமுதாயத்தின் மனிதநேயம், ஒழுக்கநெறி மற்றும் ஆன்மீகப் பரிமாணங்களை வளரச் செய்யும் புளிப்புமாவைப் போன்றது. இதுவே 'இறைநகரின்' (City of God) தனித்துவமான அடையாளமாகும்," என்று அவர் கூறினார்.

சுயநலமும், இலாப நோக்கமும் நிறைந்த இந்த உலகத்தில், நமக்குத் திரும்பச் செலுத்த வழி இல்லாதவர்களுக்கும் நாம் நன்மைகளைச் செய்ய வேண்டும். அதன் மூலம், மனிதகுலத்தின் முழுமையான வளர்ச்சிக்கு வழிகாட்டும் வகையில் கிறிஸ்தவர்கள் சிந்திக்கவும் வாழவும் பழக வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

## நற்செய்தி வாழ்வு

இயேசு தமது தியாகத்தாலும், தூய ஆவியாரின் நெருப்பாலும் நம்முடைய நோயுற்ற மனிதகுலத்தைக் குணமாக்கி, விண்ணரசை உலகிற்குள் ஒரு புளிப்புமாவைப் போலக் கொண்டு வருகிறார் என்று திருத்தந்தை விளக்கினார்.

"இயேசு தமது இறப்பு மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, அதே தூய ஆவியாரின் வல்லமையோடு தம் சீடர்களை உலகிற்கு அனுப்பினார். அவர்கள் இவ்வுலகில் அன்பு, நீதி மற்றும் அமைதி நிறைந்த இறைவார்த்தையின் அடையாளங்களாகவும் கருவிகளாகவும் திகழ வேண்டும் என்பதற்காகவே அனுப்பப்பட்டனர்," என்று திருத்தந்தை கூறினார்.

"இவை அனைத்தும் அவருடைய அருளினாலேயே சாத்தியமானது!" என்று கூறிய திருத்தந்தை, "இதன் ரகசியம் இதுதான்: சூரியனையும் விண்மீன்களையும் இயக்கும் கடவுளின் அன்பு, ஆண்டவராகிய இயேசுவைச் சந்தித்தவர்களின் இதயங்களையும் இயக்குகிறது. ஏனெனில், 'பெற்றுக்கொள்வதைவிடக் கொடுப்பதிலேயே பேரின்பம் உண்டு' என்று இயேசுவே கூறியுள்ளார்," என்று சுட்டிக்காட்டினார்.

இறுதியாக, திருத்தந்தை லியோ, தமது வருகைக்கான ஏற்பாடுகளைச் செய்த தன்னார்வலர்கள், இந்த நாட்களில் தாங்கள் பெற்ற அனுபவங்களைத் தங்களின் அன்றாட வாழ்க்கையில் தாழ்ச்சி, உறுதியான விசுவாசம் மற்றும் தாராளமான சேவை மனப்பான்மையோடு தொடர்ந்து வெளிப்படுத்த வேண்டும் என்று ஊக்குவித்துத் தமதாசி வழங்கினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

ஆனால், நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இவ்வாறு கடவுள் நம்மீது கொண்டுள்ள தம் அன்பை எடுத்துக் காட்டியுள்ளார். உரோமையர் 5:8

# ஆன்மீகப் புதுப்பித்தலுக்காக தூய அந்தோணியார் பங்கில் எரிகோ நடைப்பயணம் (Jericho Walk)

பினாங்கு: மரியாவின் வெற்றி இதயம் (Triumph Heart of Mary - THM) குழுவினர், மே 27 அன்று நிபோங் தெபால், தூய அந்தோணியார் ஆலயத்தில் பக்திமுயற்சியான 'எரிகோ நடைப்பயணத்திற்கு' (Jericho Walk) ஏற்பாடு செய்திருந்தனர். இதில் சுமார் 120 பங்குமக்கள் இறை நம்பிக்கை, பக்தி மற்றும் ஒருமைப்பாட்டு உணர்வோடு கலந்துகொண்டனர்.

ஜூன் மாதம் வரவிருக்கும் பங்குப் பெருவிழாவிற்குத் தயாரிப்பாக இந்த எரிகோ நடைப்பயணம் நடைபெற்றது. பழைய ஏற்பாட்டில், யோசுவாவின் நூலில் விவரிக்கப்பட்டுள்ள கடவுளின் மீட்புத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, பங்குச் சமூகத்திற்கு இறைவனின் ஆசி, பாதுகாப்பு மற்றும் ஆன்மீகப் புதுப்பித்தலைத் தேடும் ஒரு பக்திமுயற்சியாக இது அமைந்தது. இந்நிகழ்வு காலை 7.00 மணிக்கு பங்குத்தந்தை (Msgr) ஹென்றி ராஜு அவர்களின் தலைமையில் திருப்பலியுடன் தொடங்கியது. தொடர்ந்து காலை 8.00 மணிக்குத் தொடக்கச் செபமும், அதனைத் தொடர்ந்து பங்குமக்களுக்கும் THM உறுப்பினர்களுக்கும் இடையேயான அன்பியக் கூட்டுறவும் (Fellowship) நடைபெற்றது.

தூய அந்தோணியார் பங்குச் சமூகம் ஆன்மீக ரீதியில் புத்துயிர் பெறவும், புதுப்பிக்கப்படவும் செய்யும் ஒரு பரந்த முயற்சியின் பகுதியாக, இந்த எரிகோ நடைபயணத்தை மேற்கொள்ளுமாறு பங்குத்தந்தை (Msgr) ஹென்றி பங்குமக்களை ஊக்குவித்திருந்தார்.

பழைய ஏற்பாட்டில் யோசுவா நூலில் உள்ள வரலாற்றின்படி, இஸ்ரயேல் மக்கள் தங்கள் விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் எரிகோ நகரின் மதில்களை ஏழு நாட்கள் சுற்றி வந்தனர்; இறுதியில் அந்த மதில்கள் இடிந்து விழுந்தன. அதேபோல, இந்த நடைபயணமும் ஒரு மன்றாட்டுச் செபமாக அமைந்தது. பங்குமக்களின் ஆன்மீக மாற்றத்திற்குத் தடையாக இருக்கும் மனித அல்லது ஆன்மீக ரீதியான அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிவதே இதன் நோக்கமாகும்.

பங்குத்தந்தை மற்றும் THM அமைப்பின் பயிற்றுவிப்பாளர் (Formator) ஆக்னஸ் லிம் ஆகியோரின் தலைமையில், THM உறுப்பினர்களும் தூய அந்தோணியார் ஆலயப் பங்குமக்களும் இணைந்து, குறிக்கப்பட்ட பாதையை செபமாலை (Rosary) செபித்துக்கொண்டே ஏழு முறை சுற்றி வந்தனர்.

இந்நிகழ்வு, கத்தோலிக்கத் திருஅவை வலியுறுத்தும் 'ஒன்றிணைந்து பயணிக்கும் சினொடு (Synodality) மாமன்றத்தன்மையை' பிரதிபலித்தது. பங்கேற்பாளர்கள் தூய ஆவியாரின் தூண்டுதல்களைத் தியானித்து, தங்கள் விசுவாசத்தையும் ஒற்றுமையையும் ஆழப்படுத்தும் கருத்துக்களை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொண்டனர்.

"நடைப்பயணம் முழுவதும் தெளிவான நீல வானத்துடன் நல்ல வானிலை நமக்கு ஆசீர்வாதமாகக் கிடைத்தது, பலரின் செபங்களுக்குப் பதில் கிடைத்தது."

இரண்டரை மணி நேரம் நீடித்த இந்த நடைபயணம், ஆங்கிலம், பஹாசா (மலாய்), சீனம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மகிழ்ச்சியான புகழ்ச்சி மற்றும் ஆராதனையுடன் (Praise and Worship) நிறைவடைந்தது. இது இஸ்ரயேல் மக்கள் தங்கள் பயணத்தை உரத்த குரலில் துதித்துப் பாடி, வாத்தியங்களை முழங்கி நிறைவு செய்த விவிலிய நிகழ்வை நினைவூட்டுவதாக இருந்தது.

தூய அந்தோணியார் ஆலயத்தில் நடைபெற்ற இந்த எரிகோ நடைப்பயணம், விசுவாசம் மற்றும் ஒற்றுமையின் ஆன்மீகப் பிரகடனமாக அமைந்தது. இதில் பங்கேற்ற அனைவரையும் இது மனமாற்றத்திற்கு இட்டுச் சென்றதுடன், கடவுளின் அன்பின் மீதான அவர்களின் நம்பிக்கையையும் ஆழப்படுத்தியது. அன்று எரிகோவின் மதில்கள் விழுந்தது போல, தங்கள் பங்கிற்கு இருந்த அனைத்துத் தடைகளும் இறை அருளின் வல்லமையால் தகர்க்கப்பட்டுவிட்டதாக விசுவாசிகள் நம்புகின்றனர்.

தமிழாக்கம் ஹெரால்டு

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

# பத்து காஜா புனித யோசேப்பு தேவாலயத்தில் புது நன்மை



ஆண்டவரின் திருவுடல் மற்றும் திருஇரத்தப் பெருவிழா அன்று, புனித யோசேப்பு தேவாலயத்தில் எட்டு மாணவர்கள் முதல் திருவிருந்தைப் பெற்ற மகிழ்ச்சியான நிகழ்வில் பங்குமக்கள் ஒன்றுகூடி இறைவனைத் துதித்து நன்றிதனைச் செலுத்தினர். இத்திருப்பலி விழா, அந்த மாணவர்களின் விசுவாசப் பயணத்தில் ஒரு முக்கிய நாளாக அமைந்தது. இயேசு கிறிஸ்துவின் மெய்யான பிரசன்னத்தைத் திருவிருந்தில் நினைவுகூரும் ஆண்டவரின் திருவுடல் மற்றும் திருஇரத்தப் பெருவிழா நாளில், மாணவர்கள் முதன்முறையாக இயேசுவை நற்கருணையில் ஏற்றுக்கொண்டது மிகவும் அர்த்தமிக்க நிகழ்வாக அமைந்தது.

பல மாதங்களாக மறைக்கல்வி வகுப்புகள், ஜெபம் மற்றும் ஆன்மீகப் பயிற்சிகள் மூலம் தங்களைத் தயார்படுத்திக் கொண்ட மாணவர்கள், மிகுந்த பக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் பலிபீடத்தை அணுகினர். பெற்றோர், ஞானப்பெற்றோர், மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பங்குமக்கள் முன்னிலையில், அவர்கள் திருப்பலியில் முழுமையாக பங்கேற்று முதன்முறையாக கிறிஸ்துவின் திருவுடலைப் பெற்றுக்கொண்டனர்.

தமது மறையுரையில், திருப்பலியை நிறைவேற்றிய அருட்பணி, நற்கருணை வழியாக இயேசு தமது மக்களுடன் என்றும் இருப்பதை நினைவூட்டினார். மேலும், திருப்பலியில் தொடர்ந்து பங்கேற்று, தகுந்த முறையில் திருவிருந்தைப் பெற்று, ஜெபத்திலும் விசுவாசத்திலும் வளருமாறு மாணவர்களை ஊக்குவித்தார். முதல் திருவிருந்தைப் பெற்ற மாணவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் பங்கு சமூகத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவிக்கின்றோம். அவர்களை இந்த அருள்மிகு நாளுக்குத் தயார்படுத்திய மறைக்கல்வி ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் அனைத்து உதவியாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறோம். இம்மாணவர்கள் கிறிஸ்துவுடனான தங்களது உறவில் தொடர்ந்து வளர்ந்து, அவருடைய அன்பின் சாட்சிகளாக வாழ இறைவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

"விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வளிக்கும் அப்பம் நானே; இந்த அப்பத்தை உண்பவர் என்றென்றும் வாழ்வார்." (யோவான் 6:51)

# பொதுக்காலம் 12ஆம் வாரம் – ஞாயிறு

**எரேமியா 20: 10-13; உரோமை 5: 12-15**
**மத்தேயு 10: 26-33**

## நம்பிக்கை வாழ்வில் அச்சத்தை வெல்வோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 12-ஆம் ஞாயிறு. எதிர்ப்புகளும் துன்பங்களும் வந்தாலும், ஆண்டவர்மீது நம்பிக்கை வைப்போர் கைவிடப்படமாட்டார்கள்; இறைவன் அவர்களைப் பாதுகாத்து நீதி வழங்குவார் என்ற செய்தியை இறைவாக்கினர் எரேமியா முன்வைக்கிறார்.

தொடர்ந்து வரும் இரண்டாம் வாசகத்தில், புனித பவுல் ஆதாமின் கீழ்ப்படியாமையால் பலர் பாதிக்கப்பட்டதுபோல, கிறிஸ்துவின் அருளால் பலர் வாழ்வையும் மீட்பையும் பெறுகின்றனர். எனவே, பாவம் கொண்டு வந்த அழிவை விட கிறிஸ்துவின் அருள் மிகுந்த வல்லமையுடையது என்பதை இந்தப் பகுதியில் வலியுறுத்துகிறார்.

இன்றைய மத்தேயு நற்செய்தியில் இயேசு தமது சீடர்களை அச்சமின்றி வாழவும் நற்செய்தியைத் துணிவுடன் அறிவிக்கவும் ஊக்குவிக்கிறார். மனிதர்களுக்கு அஞ்சாமல், உடலையும் ஆன்மாவையும் ஆளும் இறைவனுக்கே அஞ்ச வேண்டும் என்று போதிக்கிறார். இறைவன் சிறிய குருவிகளைக்கூட அன்போடு பராமரிக்கிறார்; ஆகவே அவருடைய பிள்ளைகளான நாம் அவருக்குப் பெருமதிப்புடையவர்கள் என்பதை நினைவூட்டுகிறார். மேலும், மக்கள்முன் தம்மை ஏற்றுக்கொள்பவர்களை விண்ணகத் தந்தையின் முன் தாமும் ஏற்றுக்கொள்வார் என்றும், தம்மை மறுப்பவர்களை மறுப்பார் என்றும் இயேசு விவரித்ததை நமக்கு மத்தேயு நினைவுறுத்துகிறார்.

இயேசு, "இருளில் நான் உங்களுக்குச் சொல்வது" என்றும், "இரகசியமாகக் கேட்கப்படுவது" என்றும் கூறுவது, நமது மனசாட்சி எனும் அந்த இரகசியக் கருவறையில் கடவுள் நம்முடன் மேற்கொள்ளும் உரையாடலையே குறிக்கிறது. தமது உரையாடல் நமக்கு மட்டுமின்றி, "ஒளியில்" பேசப்பட வேண்டும் என்றும், "வீடுகளின் கூரைகளின் மேல்" பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்றும் இயேசு கூறுகிறார். நமது நம்பிக்கை தனிப்பட்டதாகவும் அந்தரங்கமானதாகவும் இருந்தாலும், நமது வார்த்தைகளாலும் செயல்களாலும் மற்றவர்களுடன் அதைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் அது சமூக நம்பிக்கையாக மாறும் என்கிறார்.

நமது நம்பிக்கையைப் பகிர்ந்துகொள்வது கடினமாக இருக்கலாம். நற்செய்தியின்படி வாழாத மற்றொருவரைப் புண்படுத்திவிடுவோமோ என்று நாம் அஞ்சக்கூடும். இந்த அச்சத்திற்குப் பதிலளிக்கும் விதமாக, இயேசு, "உடலை மட்டும் கொல்பவர்களுக்கு பயப்படாதீர்கள்; ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். என்று கூறுகிறார். அச்சம் ஒருபோதும் நமது நம்பிக்கையை பகிர்ந்துகொள்வதிலிருந்து நம்மைத் தடுக்கக்கூடாது என்பதே நமக்கான இன்றைய அறிவுறுத்தல்.

அவ்வாறு செய்வதற்கான ஒரு வழி, தீயவன் நம்மீது திணிக்கும் பயத்திற்குப் பதிலாக, கடவுளின் நல்லுறவில் நம்மைத் தொடர்ந்து இணைத்துக் கொள்வதே ஆகும்.

நற்செய்தியின் உண்மை பழிப்பினையால் வழிநடத்தப்படும் மனசாட்சியானது தெளிவுடனும் அன்புடனும் பேசுவதற்கான நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது. ஆன்மாக்களை அவரிடம் ஈர்க்கும் விதத்தில், கடவுளின் பழிப்பினையை எப்போது, எப்படி எடுத்துரைக்க வேண்டும் என்பதைப் பகுத்தறிய அது நமக்கு உதவுகிறது. நாம் அவருடைய குரலுக்குத் திறந்த மனதுடன் இருந்து, அவர் நமக்குத் தெளிவுபடுத்தும் செய்தியை மனமுடன் ஏற்றால், நாம் கிறிஸ்துவுக்கு உண்மையான சாட்சிகளாக மாறி, அவருடைய ஒளியை இங்கு கொண்டு வருவோம்.

ஆர்.கே.சாமி, சிரம்பான்

ஹெரால்டு (HERALD) செய்தித் தொடர்பாளர் குழுமத்தில் இணைந்து, அதன் ஒரு அங்கமாக மாறுங்கள்.

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட (300 DPI) JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:
மின்னஞ்சல்: tamil@herald.com.my
வாட்ஸ்அப்: 012-5599015